



# தமிழ் மக்கள் குரல்

tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி





மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | திங்கள்கிழமை, ஆகஸ்ட் 19, 2024 | இதழ் 128

## 800 பேருக்கு வேலைவாய்ப்பளிக்கும் ரூ.385 கோடி முதலீட்டுத் திட்டங்களுக்கு மெப்ஸ் ஒப்புதல் அளித்துள்ளது

சென்னை, 19 ஆகஸ்ட் 2024: சென்னை ஏற்றுமதி நடைமுறை மண்டலமான மெப்ஸ்-ன் தொழிலக ஒப்புதல் குழுக்கூட்டம் திரு அலெக்ஸ் பால் மேனன் தலைமையில் இன்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மொத்தம் 17 தொழிலகங்களுக்கான ஆலோசனைகள் ஆய்வு செய்யப்பட்டு, ஒப்புதல் அளிக்கப்பட்டன. இவற்றில் 10 தொழிலகங்கள் புதியவை. அனுமதியளிக்கப்பட்ட தொழிலகங்களின் முதலீட்டு மதிப்பு ரூ.385 கோடியாகும். இதன் மூலம் 800 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் தொழிலகங்கள் ஒப்புதல் பற்றி கருத்து தெரிவித்த திரு அலெக்ஸ் பால் மேனன், வணிக வளர்ச்சிக்கு ஆதரவாக ஒப்புதல் நடைமுறைகளை விரைவுப்படுத்த உறுதிபூண்டு இருப்பதாக கூறினார். அனுமதியளித்த அதே நாளில், அதற்கான




கடிதமும் அளிக்கப்படுவது வணிகத்தை எளிதாக்குவதில் கவனம் செலுத்துவதற்கான சான்றாகும் என்று அவர் குறிப்பிட்டார். இந்த அணுகுமுறை மேலும் கூடுதலாக முதலீடுகளை ஈர்ப்பது நிச்சயம் என்றும், இது பொருளாதார சூழலை வலுப்படுத்தும் என்றும் அவர் கூறினார்.




## குடியரசுத் தலைவர் மாளிகையில், நாடு முழுவதும் உள்ள பல்வேறு பள்ளி குழந்தைகளுடன், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு ரக்ஷா பந்தன் கொண்டாடினார்

சென்னை, 19 ஆகஸ்ட் 2024: குடியரசுத் தலைவர் மாளிகையில், இன்று நாடு முழுவதிலும் உள்ள பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த குழந்தைகள் மற்றும் மாணவர்களுடன் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, ரக்ஷா பந்தன் கொண்டாட்டத்தைக் கொண்டாடினார்.

மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான், கல்வி, திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகத்தின் இணையமைச்சர் (தனிப்பொறுப்பு) திரு ஜெயந்த் சவுத்ரி ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறை செயலாளர் திரு சஞ்சய் குமார் மற்றும் கல்வி அமைச்சகத்தின் பிற அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மாணவர்களை ஆசீர்வதித்து வழிகாட்டியதற்காகவும், இந்த ரக்ஷா பந்தனை அவர்களுக்கு சிறப்பான ஒன்றாக மாற்றியதற்காகவும் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்முவுக்கு திரு தர்மேந்திர பிரதான் தனது நன்றியைத் தெரிவித்தார். பின்னர், மாணவர்களுடன் உரையாடிய அவர்,



அவர்களின் இலக்குகள் மற்றும் விருப்பங்கள் குறித்து கேட்டறிந்தார்.

ஒடிசாவின் சம்பல்பூரைச் சேர்ந்த மாணவர்களில் ஒருவரான பிரியான்ஷா பிரதான், ரக்ஷா பந்தன் கொண்டாடுவது குறித்த தனது உற்சாகத்தை குடியரசுத் தலைவருடன் பகிர்ந்து கொண்டார். ரக்ஷா பந்தன் பண்டிகையின் உணர்வு சகோதர, சகோதரிகளுக்கு இடையில் மட்டுமல்ல ராணுவ வீரர்கள், பெற்றோர்கள் மற்றும் நண்பர்களுடனும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற குடியரசுத் தலைவரின் கருத்துகள் தனக்கு பெருமளவில் உத்வேகம் அளித்ததாக அவர் கூறினார். அருணாச்சலப் பிரதேசத்தைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர், குடியரசுத் தலைவரின் எளிமையும், அரவணைப்பும் தம்மை எவ்வாறு கவர்ந்தது என்று கூறினார்.

16 மாநிலங்களின் அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த 180-க்கும் மேற்பட்ட மாணவர்கள் குடியரசுத் தலைவரை இன்று சந்தித்தனர். இந்தியாவின் வளமான கட்டிடக்கலை மற்றும் தோட்டக்கலை பாரம்பரியத்திற்கு சான்றாக நிற்கும் குடியரசுத் தலைவர் மாளிகையில் அமைந்துள்ள அமிர்த தோட்டத்தை மாணவர்கள் பார்வையிட்டனர். குடியரசுத் தலைவருடன் கலந்துரையாடுவதற்கான இந்த வாய்ப்பு மாணவர்களுக்கு மறக்க முடியாத அனுபவமாக இருந்ததுடன், நாட்டின் கலாச்சார பாரம்பரியங்கள் மீதான பெரும் பெருமை மற்றும் மரியாதை உணர்வை அவர்களுக்கு ஏற்படுத்தியது.

## ரஷ்ய கடற்படை தலைமை தளபதி அட்மிரல் அலெக்சாண்டர் அலெக்சேவிச் மொய்சேயேவ் வருகை




சென்னை, 19 ஆகஸ்ட் 2024: ரஷ்ய கடற்படையின் தலைமைத் தளபதி அட்மிரல் அலெக்சாண்டர் அலெக்சேவிச் மொய்சேயெவ், ஆகஸ்ட் 19 முதல் 22 வரை இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். ரஷ்யா மற்றும் இந்திய கடற்படைகளுக்கு இடையிலான நீண்டகால உறவுக்கு இந்த பயணம் ஒரு சான்றாகும். இந்தியா மற்றும் ரஷ்யா இடையேயான இருதரப்பு கடற்படை உறவுகளை வலுப்படுத்துவதும், கடற்படை ஒத்துழைப்புக்கான புதிய வழிகளை கண்டறிவதும் இந்த பயணத்தின் நோக்கமாகும்.

அட்மிரல் அலெக்சாண்டர் அலெக்சேவிச் மொய்சேவ், ஆகஸ்ட் 19, 24 அன்று புதுதில்லியில் இந்திய கடற்படையின் கடற்படைத் தளபதி அட்மிரல் தினேஷ் கே திரிபாதியை சந்தித்து, கடற்படைக்கு இடையிலான ஒத்துழைப்பை மேலும்



வலுப்படுத்துவதற்கான ஒத்துழைப்பு வழிமுறைகள் மற்றும் நடவடிக்கைகள் குறித்து விவாதித்தார். சவுத் பிளாகில் புல்வெளியில் அவருக்கு அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. இந்திய கடற்படை, ரஷ்ய கடற்படையுடன் பல்வேறு வழிகளில் ஒத்துழைத்து வருகிறது.

ரஷ்ய கடற்படையின் தலைமை தளபதி, ராணுவ தளபதி, பாதுகாப்புத்துறை செயலாளர் மற்றும் இந்தியாவின் தேசிய கடல்சார் பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளர் ஆகியோரையும் புதுதில்லியில் தனது உத்தியோகபூர்வ நிகழ்ச்சிகளின் ஒரு பகுதியாக சந்திக்க உள்ளார்.



# பா.ஜ.க.வுடன் ரகசிய உறவு வைத்துக்கொள்ள வேண்டிய தேவை இல்லை எடப்பாடிக்கு ஸ்டாலின் பதில் ‘எங்கள் உரிமையை ஒருநாளும் விட்டு கொடுக்க மாட்டோம்’

சென்னை, 19 ஆகஸ்ட் 2024: பா.ஜ.க.வுடன் ரகசிய உறவு வைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை என்று எடப்பாடி பழனிசாமிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பதில் அளித்தார்.

கருணாநிதி நூற்றாண்டு நினைவு நாணயத்தில் ‘தமிழ் வெல்லும்’ என்று எழுதப்பட்டிருக்கிறது என்றும் அவர் பதிலளித்துள்ளார்.

நேற்று நடந்த விழா மத்திய அரசின் விழழ. எனவே ராகுல் காந்தியை அழைக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

திருவொற்றியூர் எம்.எல்.ஏ. கே.பி.சங்கர் இல்ல திருமணத்தை இன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நடத்தி வைத்து பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது:

நேற்றைய தினம் கருணாநிதி நூற்றாண்டு நாணயம் வெளியீடு விழா நடந்தது. நாணயம் அறிவாலயத்திற்கு வந்துவிட்டது. யார் வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் சென்று 100 ரூபாய் நாணயத்தை பெற்றுக் கொள்ளலாம். 100 ரூபாய் நாணயம் தான். ஆனால் அதன் மதிப்பு 10,000 ரூபாய். யார் வேண்டுமென்றாலும் 10,000 ரூபாய் கொடுத்து அறிவாலயத்தில் சென்று அதைப் பெற்றுக் கொள்ளலாம்.

பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கின் நேற்றைய உரை உள்ளபடியே கூட்டணிக் கட்சித் தலைவர்கள் எல்லாம் பேசினால் எப்படி பேசுவார்களோ அதைவிட அதிகமாக, தி.மு.க.-வினர் பேசுவதைவிட அதிகமாக, சிறப்பாக கலைஞரைப் பற்றி அவர் பேசியது உள்ளபடியே வரலாற்றில் பொறிக்கத்தக்க உரையாக அந்த உரை அமைந்தது. கலைஞரை இந்தளவிற்கு புகழ வேண்டும், பாராட்டிப் பேச வேண்டும் என்ற அவசியம் அவருக்கு இல்லை. அவருக்கு தேவையும் இல்லை. ஆனாலும் பேசினார் என்றால், உள்ளத்தில் இருந்து உண்மையை பேசினார் அமைச்சர் ராஜ்நாத் சிங்.

இதை சிலரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஒருத்தர் இருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் என்று தமிழ்நாட்டில் இருக்கிறார். அவர் நேற்று பேட்டி கொடுக்கிறார். என்னவென்றால், நாணயம் வெளியிடுகிறார்கள். இந்தியில் இருக்கிறது. தமிழில் இல்லை. தமிழ், தமிழ் என்று முழங்குகிறார்களே, இந்தியில் இருக்கிறது என்று சொல்கிறார். முதலில் அரசியல் தெரிந்திருக்கவேண்டும் . இல்லை நாட்டின் நடப்பு



புரிந்திருக்கவேண்டும். அந்த நிகழ்ச்சி எப்படி நடக்கிறது என்றால், ஒன்றிய அரசு அனுமதி கொடுத்து ஒன்றிய அரசின் மூலமாக நடைபெறக்கூடிய நிகழ்ச்சி இந்த நிகழ்ச்சி. ஏற்கனவே, பலபேருக்கு நாணயங்கள் வெளியிடப்பட்டிருக்கிறது. மறைந்த எம்.ஜி.ஆருக்கு நாணயம் வெளியிடப்பட்டிருக்கிறது. அதைபோல பேரறிஞர் அண்ணாவுக்கு நாணயம் வெளியிடப்பட்டிருக்கிறது. அந்த நாணயத்தை எல்லாம் ஒருவேளை பார்த்திருக்கமாட்டார் என்று நினைக்கிறேன். அதை எடுத்து பாருங்கள். அனைத்து தலைவர்களுக்கும் நாணயம் வெளியிடுகிறபோது ஒன்றிய அரசு இந்தியில் தான் எழுதி, அதன் பிறகு ஆங்கிலத்தில் எழுத்துக்கள் அமைந்திருக்கும்.

ஆனால் அண்ணாவுக்கு நாணயத்தை வெளியிடுகிறபோது கலைஞர் என்ன செய்தார் என்றால், யாரும் செய்யாத ஒரு அதிசயத்தை செய்தார். அண்ணாவின் தமிழ் கையெழுத்து அதில் இடம் பெறச் செய்யவேண்டும் என்று சொல்லி, அண்ணாவின் தமிழ் கையெழுத்து நாணயத்தில் பொறிக்கப்பட்டு அதற்கு பிறகுதான் அது வெளியிடப்பட்டது. அதுபோலதான், கலைஞருடைய நாணயத்தை வெளியிடுகின்றபோது கலைஞருக்கு மிகவும் பிடித்த எழுத்து தமிழ் வெல்லும். அவர் தமிழில் கையெழுத்து இடுகிறபோது பெரும்பாலும், தமிழ் வெல்லும், தமிழ் வெல்லும் என்று சொல்லித்தான் கையெழுத்திடுவார்.

இல்லையென்றால், அண்ணா வாழ்க, அண்ணா புகழ் ஓங்குக, பெரியார் வாழ்க என்று சொல்லிதான் கையெழுத்திடுவார். ஆகவே, தமிழ் வெல்லும் என்பது தமிழில்தான் எழுதப்பட்டிருக்கிறது. இதைக்கூட அவர் பார்க்காமல், புரிந்து கொள்ளாமல், தெரிந்து கொள்ளாமல், இப்படி ஒரு எதிர்க்கட்சித் தலைவர் நமக்கு வந்து வாய்த்திருக்கிறார் என்றுதான் வருத்தமாக இருக்கிறது.

கேட்கிறார்? ஏன் ராகுல் காந்தியை அழைக்கவில்லை? அய்யா எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, இந்த நிகழ்ச்சி தி.மு.க. நடத்தவில்லை. நிகழ்ச்சியை நடத்தியது ஒன்றிய அரசு. அது ஒன்றிய அரசின் நிகழ்ச்சி. அதை முதலில் புரிந்து கொள்ளவேண்டும். அதன் அடிப்படையில்தான் நிகழ்ச்சி நடந்தது. இந்த சராசரி அறிவு கூட இல்லாமல், ஒரு எதிர்க்கட்சித் தலைவர் இருக்கிறார் என்பதுதான் வேதனையாக இருக்கிறது. கலைஞருக்கு நாணயம் வெளியிடுவது ஒன்றிய அரசு. அதனால் ஒன்றிய அமைச்சரை அழைத்து அந்த நிகழ்ச்சியை நாங்கள் சிறப்பாக நடத்தி முடித்திருக்கிறோம். இதில் பழனிசாமிக்கு எங்கே வலிக்கிறது? அதைத்தான் நான் கேட்கிறேன்.

எம்.ஜி.ஆருக்கு நாணயம் வெளியிட்டார்கள். யார் வெளியிட்டார்கள் தெரியுமா? ஒன்றியத்தில் இருந்து யாரும் வரவில்லை. எடப்பாடி பழனிச்சாமியே வெளியிட்டார். ஏனென்றால், ஒன்றிய அரசு அவரை மதிக்கவில்லை. அவரை ஒரு முதலமைச்சராகவே நினைக்கவில்லை. ஏன் மனிதனாகவே நினைக்கவில்லை. வர மறுத்துவிட்டார்கள். இதுதான் அவருக்கு இருந்த மரியாதை.

இன்றைக்கு நாம் அழைத்த அடுத்த விநாடி ஒரு சொல்கூட தட்டாமல் ஒரு 15 நிமிடம், 30 நிமிடத்திற்கு நடத்திவிட்டு போகவேண்டும் என்று சொன்னதற்கு, 15 நிமிடம் என்ன? எவ்வளவு நேரம் இருந்தாலும் காத்திருந்து அந்த நிகழ்ச்சியை நடத்திவிட்டு போகிறேன் என்று சொல்லிக் கொண்டு வந்தார். அதுதான் தி.மு.க.-விற்கு இருக்கக்கூடிய பெருமை; கலைஞருக்கு இருக்கக்கூடிய சிறப்பு.

இன்னும் ஒன்றை சொல்லவேண்டுமென்றால், அம்மா, அம்மா என்று புகழ்ந்து கொண்டு இருக்கிறார்களே அண்ணா திமுக-வினர், பாக்கெட்டில் படத்தை வைத்துக் கொண்டு பூஜை செய்து கொண்டிருக்கிறார்களே, அந்த அம்மையார் இறந்து எத்தனை வருடங்கள் ஆகிறது? நான் கேட்கிறேன், இதுவரைக்கும் அந்த அம்மையாரால் வளர்க்கப்பட்டவர்கள், உருவாக்கப்பட்டவர்கள் ஒரு இரங்கல் கூட்டமாவது நடத்தியிருக்கிறார்களா? ஒரு இரங்கல் கூட்டத்தை நடத்துவதற்கு கூட யோக்கியதை அற்றவர்கள், கலைஞருடைய விழாவை பார்த்து விமர்சனம் செய்வதற்கு உங்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது என்றுதான் நான் கேட்கிறேன்.

ராஜ்நாத் சிங்கை நாம் அழைத்ததால் ஏதோ பா.ஜ.க.வோடு நாம் உறவு வைத்துக் கொண்டிருக்கிறோம், உறவு வைக்கப்போகிறோம் என்று ஒரு செய்தியை கிளப்பிவிட்டிருக்கிறார்கள். இது ஊடகத்திற்கு ஒரு தீனி. ஒவ்வொரு ஊடகங்களும், ஒவ்வொரு கோணத்தில் பேசிக் கொண்டிருக்கிறார்கள். திட்டினாலும் தி.மு.க.-வைதான், வாழ்த்தினாலும் தி.மு.க.--வைதான். நாங்கள் எல்லாம் ரகசிய உறவு வைத்துக் கொள்ளவேண்டும் என்ற அவசியமே இல்லை.

அம்மையார் இந்திராகாந்தி சொன்னார், கலைஞரை பொறுத்தவரைக்கும், தி.மு.க.--வை பொறுத்தவரைக்கும் எதிர்த்தாலும் கொள்கையோடு எதிர்ப்பார்; ஆதரித்தாலும் கொள்கையோடு ஆதரிப்பார் என்று சொல்லியிருக்கிறார். எங்களுக்கு அது ஒன்றே போதும். அந்த அளவிற்கு மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் கூட நாங்கள் தீர்மானம் போட்டிருக்கிறோம். முதலில் பழனிசாமி அதைப் படிக்க வேண்டும். பழனிசாமி மாதிரி ஊர்ந்து சென்று, பதுங்கி சென்று பழி வாங்குகின்ற புத்தி தி.மு.க.--வுக்கு கிடையாது. எல்லோருக்கும் உரிய மரியாதையை நாங்கள் கொடுப்போம். அதற்காக நிச்சயமாக சொல்கிறேன், உறுதியாக சொல்கிறேன் அண்ணா மீது ஆணையிட்டு சொல்கிறேன், நமக்கென்று இருக்கக்கூடிய உரிமையை ஒருநாளும் விட்டுக்கொடுக்க மாட்டோம். இதுதான் அண்ணாவும், கலைஞரும் நமக்கு அமைத்துத் தந்திருக்கக்கூடிய பாதை. இவ்வாறு மு.க.ஸ்டாலின் பேசினார்.

# மருத்துவ படிப்பு தரவரிசை பட்டியல் வெளியீடு: 21ந்தேதி கவுன்சிலிங் துவக்கம் நாமக்கல் மாணவர் முதலிடம்: அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி

சென்னை, 19 ஆகஸ்ட் 2024: எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ்., படிப்புகளுக்கான தரவரிசை பட்டியலை இன்று (19 ந் தேதி) அமைச்சர் மா.சுப்பிரமணியன் வெளியிட்டார். வரும் ஆகஸ்ட் 21 ம் தேதி புதன்கிழமை மருத்துவ தேர்வுக்குழு, மூலமாக முதல் கட்ட கவுன்சிலிங் நடத்தப்பட உள்ளது.

முதல் 10 இடங்களில் நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்தவர்கள் 4 பேர் இடம் பிடித்துள்ளனர். அடுத்தபடியாக சென்னையை சேர்ந்த 3 பேர் இடம் பிடித்துள்ளனர்.

720 மதிப்பெண் பெற்று நாமக்கல் மாணவர் ரஜினீஷ் முதலிடத்தை பிடித்துள்ளார்.

2024 -25ம் ஆண்டுக்கான இளநிலை மருத்துவ படிப்புகளுக்கான தரவரிசை பட்டியலை வெளியிட்டு அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியதாவது:

கடந்தாண்டை விட இந்த ஆண்டு 150 மாணவர்கள் கூடுதலாக சேர வாய்ப்பு கிடைத்துள்ளது. இதில் அன்னை மருத்துவக் கல்லூரியில் 50 மாணவர்களும், கன்னியாகுமரியில் உள்ள மெடிக்கல் மிஷன் அண்ட் ரிசர்ச் செண்டர் கல்லூரியில் 100 மாணவர்களும் என மொத்தம் 150 இடங்கள் கூடுதலாக கிடைக்கப் பெற்றுள்ளது.

தமிழ்நாட்டில் மருத்துவப் படிப்புகளைப் பொறுத்தவரை 9,800 எம்பிபிஎஸ், 2150 பல் மருத்துவ இடங்கள் உள்ளன.



இவர்களுக்கான கலந்தாய்வு ஆகஸ்ட் 21 ஆம் தேதி தொடங்குகிறது. இந்த இடங்களுக்கு 43 ஆயிரத்து 63 பேர் விண்ணப்பித்துள்ளனர். இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 2 ஆயிரத்து 721 பேர் அதிகம் ஆகும். அரசுக் கல்லூரிகள் மற்றும் தனியார் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டில், 6,630 எம்பிபிஎஸ் இடங்கள் உள்ளன.

தரவரிசை பட்டியலில், 720 மதிப்பெண் பெற்று நாமக்கல் மாணவர் ரஜினீஷ் முதலிடத்தை பிடித்துள்ளார்.

சென்னையை சேர்ந்த சையது ஆஃப்ரின் யூசுப் 2 -வது இடத்தை பிடித்துள்ளார். சென்னையை சேர்ந்த சைலஜா 3-வது இடத்தை பிடித்துள்ளார். ராமநாதபுரத்தை சேர்ந்த ஸ்ரீராம் என்ற மாணவர் 4-வது இடத்தை பிடித்துள்ளார்.

திருவண்ணாமலையை சேர்ந்த ஜெயதி பூர்வஜா என்ற மாணவி 5-வது இடத்தை பிடித்துள்ளார். நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டை சேர்ந்த ரோஹித் 6-ம் இடத்தை பிடித்துள்ளார். நாமக்கல் மாவட்டம் மேகானூரை சேர்நத் சபரீசன் 7-ம் இடத்தை பிடித்துள்ளார். சென்னை பெரவள்ளூரை சேர்ந்த ரோஷினி என்ற மாணவி 8-ம் இடத்தை பிடித்துள்ளார். நாமக்கல் மாவட்டம் நல்லிபாளையத்தை சேர்ந்த விக்னேஷ் என்ற மாணவர் 9-ம் இடத்தை பிடித்துள்ளார். கோவையை சேர்ந்த விஜய் கிர்த்திக் சசிகுமார் என்ற மாணவர் 10-ம் இடத்தை பிடித்துள்ளார்.

அதேபோல அரசின் 7.5 சதவீத இட ஒதுக்கீட்டில் 3,733 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. அவர்களில் 3683 மாணவர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.இந்த இட ஒதுக்கீட்டில், 669 மதிப்பெண்களைப் பெற்று சென்னையைச் சேர்ந்த ரூபிகா முதலிடம் பெற்றுள்ளார். சைதாப்பேட்டை பள்ளி மாணவி காயத்ரி இரண்டாவது இடமும், தண்டராம்பட்டு மாணவி அனுஷ்யா மூன்றாவது இடமும், ரத்தீஸ் நான்காவது இடமும் பெற்றுள்ளனர்.

அரசு பள்ளியில் படித்த மாணவர்களுக்கான 7.5 சதவீத இடஒதுக்கீடு, மாற்றுத்திறனாளி மாணவர்கள், முன்னாள் ராணுவத்தினர் மற்றும் விளையாட்டு வீரர்கள் என 4 வகை சிறப்பு பிரிவினருக்கான கலந்தாய்வு ஆகஸ்ட் 22 மற்றும் 23 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது” என்றார். இவ்வாறு அவர் கூறினார்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

## புதிய தலைமைச் செயலாளராக முருகானந்தம் பதவி ஏற்பு



சென்னை, 19 ஆகஸ்ட் 2024: தமிழக அரசின் தலைமைச் செயலராக இருந்த சிவ்தாஸ் மீனா ஐ.ஏ.எஸ், தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையத் தலைவராக நியமிக்கப்பட்டதையடுத்து முதல்வரின் தனிச் செயலராக இருந்த நா.முருகானந்தம் புதிய தலைமைச் செயலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் வெளியான ஒரு சில நிமிடங்களிலேயே நா.முருகானந்தம் புதிய தலைமைச் செயலாளராக பொறுப்பேற்றுக் கொண்டார். அவர் தமிழகத்தின் 50 வது தலைமைச் செயலர் என்ற அந்தஸ்தைப் பெறுகிறார்.

தமிழக அரசின் தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த ஆண்டு ஜூலை 1- ந் தேதி தலைமைச் செயலாளராக பதவியேற்ற சிவ்தாஸ் மீனா ஓராண்டுக்கும் மேலாக அந்த பதவியில் இருந்தார். இந்த நிலையில் சிவ்தாஸ் மீனா மாற்றம் செய்யப்பட்டுள்ள நிலையில், தமிழக அரசின் புதிய தலைமைச் செயலாளராக தற்போது முதலமைச்சரின் தனி செயலாளராக இருக்கும் முருகானந்தம் நியமிக்கப்பட்டுள்ளார். 50 -வது தலைமைச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள முருகானந்தம் சென்னையைச் சேர்ந்தவர்.

முருகானந்தம் 1991 -ம் ஆண்டு ஐ.ஏ.எஸ். தேர்ச்சி பெற்று திருநெல்வேலி மாவட்டத்தில் சார் ஆட்சியராக தனது பணியை தொடங்கினார். இவர் பல்வேறு துறைகளில் பணியாற்றியவர். 2001 முதல் 2004-ம் ஆண்டு வரை கோவை மாவட்ட கலெக்டராக பணியாற்றினார். ஊரக வளர்ச்சித்துறையின் இணைச்செயலாளர், டெல்லி தமிழ்நாடு இல்லத்தின் முதன்மை உறைவிட ஆணையராக பணியாற்றியுள்ளார். மேலும் கடந்த அண்ணா தி.மு.க. ஆட்சியில் தொழில்துறை முதன்மைச் செயலாளராக பதவி வகித்தார். 2021- ல் திமுக அரசு அமைந்த பிறகு இரண்டு ஆண்டுகள் நிதித் துறை செயலாளராக இருந்தவர்.

## முதல் முறையாக நடைபெறும் சென்னை புரோ சேம்பியன்ஷிப் கோல்ஃப் போட்டிகள்



சென்னை, 19 ஆகஸ்ட் 2024: சென்னை புரோ சேம்பியன்ஷிப் போட்டியின் முதன்முறை தொடக்க நிகழ்வு, தமிழ்நாடு கோல்ஃப் ஃபெடரேஷன் (டி என் ஜி எஃப்) காஸ்மோ கோல்ஃப் கோர்ஸ் மைதானத்தில் ஆகஸ்ட் 20-23 நாட்களில் நடைபெற உள்ளது. ரூ.50 இலட்சம் என்ற பரிசுத்தொகையைக் கொண்டதாக இப்போட்டித்தொடர் நடத்தப்படுகிறது. இதில், புரொஃபஷனல் - அமெச்சூர் நிகழ்வானது, ஆகஸ்ட் 24 அன்று நடைபெறும். 123 தொழில்முறை விளையாட்டு வீரர்கள் மற்றும் மூன்று அமெச்சூர் வீரர்கள் உட்பட, 126 கோல்ஃப் வீரர்கள் இந்த போட்டித்தொடரில் பங்கேற்கவிருக்கின்றனர். இப்போட்டித் தொடருக்காக களத்தில் இறங்கும் இந்திய தொழில்முறை விளையாட்டு வீரர்களுள் வீர் அஹ்லவாட் (டாடா ஸ்டீல் பி ஜி டி ஐ தரவரிசையில் முதலிடம் வகிப்பவர்), மனு காந்தாஸ், ரஷித் கான், கரன்தீப் கோச்சார், சிக்கரங்கப்பா, சௌரியா பினு மற்றும் உதயன் மனே ஆகியோரும் உள்ளடங்குவர். வெளிநாடுகளிலிருந்து வந்து இப்போட்டியில் பங்கேற்கும் முக்கியமான வீரர்களுள் ஸ்ரீலங்காவின் என். தங்கராஜா கே. பிரபாகரன் மற்றும் அனுரா ரோஹனா, பங்களாதேஷைச் சேர்ந்த ஜமால் உசைன் மற்றும் படால் உசைன், செச்சியாவின் ஸ்டீஃபன் டேனெக், நேபாளின் சுபாஷ் டமாங், கனடாவின் சுக்ராஜ் சிங் கில், தென் கொரியாவின் சி இன் கிம், ஜப்பானின் மொகோடோ இவாசகி மற்றும் அமெரிக்காவின் டோம்னிக் பிச்சிரில்லோ ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். சென்னையைச் சேர்ந்த பிரத்யும்னா பிரகாஷ் மற்றும் எஸ். பிரசாந்த் ஆகிய தொழில்முறை வீர ர்கள் மற்றும் பிரணவ் நந்தகுமார் மற்றும் முன்னாள் இந்திய கிரிக்கெட் அணி வீர ர் ஆகிய அமெச்சூர் வீரர்களும் இப்போட்டிக் களத்தில் அவர்களது திறமைகளை வெளிப்படுத்தவிருக்கின்றனர். பிஜிடிஐ - ன் தலைமை செயல் அலுவலர் திரு. உத்தம் சிங் முண்டி பேசுகையில், “சென்னை புரோ சேம்பியன்ஷிப் - ன் முதன்முறை தொடக்கநிகழ்வு நடைபெறவிருப்பதை அறிவிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்தியாவில் விளையாட்டுகளின் மிகச்சிறந்த புரவலராக இருந்து வரும் திரு. என். ஸ்ரீனிவாசன் மற்றும் டி என் ஜி எஃப் கோல்ஃப் கோர்ஸ் மைதானத்தின் தொடர்ச்சியான ஆதரவின் காரணமாக சமீப ஆண்டுகளில் பிஜிடிஐ - ன் ஒரு முக்கியமான கோல்ஃப் விளையாட்டு அமைவிடமாக சென்னை உருவெடுத்திருக்கிறது. இந்த சீசன் - ன் இரண்டாவது பகுதியில் போட்டி இன்னும் அதிக தீவிர வடிவம் எடுக்கின்ற நிலையில், பரபரப்பான போட்டியை இங்கு நாங்கள் ஆவலோடு எதிர்நோக்குகிறோம்.” என்று கூறினார். தமிழ்நாடு கோல்ஃப் ஃபெடரேஷன் - ன் கௌரவ செயலாளர் திரு. ஆர்.கே. ஜாவெர் பேசுகையில், “தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாக பி ஜி டி ஐ போட்டித்தொடரை இங்கு நடத்துவதில் நாங்கள் பெரும் மகிழ்ச்சியடைகிறோம். டிஎன்ஜிஎஃப் - ன் கோல்ஃப் மைதானத்தின் சவால் மிக்க தள அமைப்பு மற்றும் சூழ்நிலைகள், இந்தியாவின் முன்னணி தொழில்முறை வீரர்களின் திறன்களை நிச்சயம் சோதனைக்கு உட்படுத்தும் என்பதால், அதிக போட்டி நிறைந்ததாக இந்த கோல்ஃப் போட்டித்தொடர் இருக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். சிறப்பாக விளையாடுவதற்கான சூழ்நிலைகளை வழங்குவதற்கு டி என் ஜி எஃப் - ல் உள்ள நாங்கள் கடினமாக உழைத்திருக்கிறோம் மற்றும் இந்த அனுபவத்தை கோல்ஃப் விளையாட்டு வீரர்கள் பெரிதும் ரசிப்பார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.” என்று குறிப்பிட்டார். “5 நட்சத்திர தரம் கொண்டதாக பெரும்பாலான உறுப்பினர்களால் கருதப்படும் கிளப் ஹவுஸ் - ம், இங்கு கிடைக்கக்கூடிய மிகச்சிறப்பான உணவு மற்றும் பான வசதிகளும் மற்றும் இங்கு அமையப்பெற்றுள்ள பிற சௌகரியங்களும் இப்போட்டித் தொடருக்காக வரும் தொழில்முறை கோல்ஃப் வீரர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு ஒரு கூடுதல் கவர்ச்சி அம்சமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. இப்போட்டித் தொடரானது அனைவருக்கும் ஒரு இனிய அனுபவமாக இருக்கும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.”

## சென்னையில் கடலோர காவல்படையின் நவீன கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையம்: மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் திறந்து வைத்தார்



சென்னை, 19 ஆகஸ்ட் 2024: சென்னையில் நவீன வசதிகளுடன் புதிதாக கட்டப்பட்டுள்ள இந்திய கடலோர காவல்படை கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மைய கட்டிடத்தை பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் நேற்று திறந்து வைத்தார். மேலும், சென்னையில் மண்டல கடல் மாசு நிவாரண மையம், புதுச்சேரியில் கடலோர காவல்படை விமான வளாகம் ஆகியவற்றையும் அவர் திறந்து வைத்தார்.

சென்னை நேப்பியர் பாலம் அருகே கடலோர காவல் படையின் கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்துக்காக ரூ,26.10 கோடியில் புதிய கட்டிடம் கட்டப்பட்டு இருக்கிறது. இதன் திறப்பு விழா நேற்று மாலை நடந்தது. இந்த கட்டிடத்தை மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் திறந்துவைத்தார்.

அதனைத்தொடர்ந்து புதிய கட்டிடத்துக்குள் சென்று கடல்சார் மீட்பு நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த பணிகளை அவர் பார்வையிட்டார். இந்த கட்டிடத்தில் மேற்கொள்ளப்படும் பணிகள் குறித்தும் அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

இப்புதிய கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையம் கடலில் ஆபத்தில் உள்ள கடல்சார் மற்றும் மீனவர்களுக்கான மீட்பு நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பு மற்றும் செயல்திறனை மேம்படுத்தும். இந்த அதிநவீன வசதி கடலில் உயிர்களை பாதுகாப்பதற்கும், முக்கியமான சூழ்நிலைகளில் விரைவான நடவடிக்கையை இந்திய கடலோர காவல்படை மேற்கொள்வதற்கும் வழி வகுக்கும்.

சென்னை துறைமுக வளாகத்தில் அமைந்துள்ள கடலோர காவல்படையின் மண்டல கடல் மாசு மீட்பு மையம், கடல் மாசு மேலாண்மையில் ஒரு முன்னோடியாக விளங்குகிறது.

இந்த பிராந்தியத்தில் முதன்முறையாக, கடலோர மாநிலங்களை ஒட்டியுள்ள நீர்நிலைகளில், குறிப்பாக எண்ணெய் மற்றும் ரசாயனக் கசிவுகளை ஒருங்கிணைப்பதில் இது முக்கிய பங்கு வகிக்கும்.

புதுச்சேரியில் உள்ள கடலோர காவல்படை விமானப்படை வளாகம், புதுச்சேரி மற்றும் தென் தமிழக கடலோரத்தில் கடல்சார் பாதுகாப்பை வலுப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கும்.

இந்த வளாகத்தில் சேத்தக் மற்றும் மேம்பட்ட இலகுரக ஹெலிகாப்டர் படைப் பிரிவுகள் அமர்த்தப்பட்டு, வான்வழி கண்காணிப்பு மற்றும் மீட்பு நடவடிக்கை திறன்களை மேம்படுத்தும்.

இந்த விழாவில் இந்தியக் கடலோர காவல்படையின் கிழக்கு பிராந்திய தளபதி ஐ.ஜி.டோனி மைக்கேல், தக் ஷிண பாரத ராணுவ அதிகாரி லெப்டினென்ட் ஜென்ரல் கரன்பிர் சிங் பிரார், எம்.பி.க்கள் தயாநிதி மாறன், கலாநிதி வீராசாமி, அமைச்சர் தங்கம் தென்னரசு உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர்.

## ‘அவர்கள் எனக்கு (ஒலிம்பிக் கமிட்டி) தங்கப்பதக்கத்தை வழங்கவில்லை. ஆனால் மக்கள் எனக்கு அதை கொடுத்து விட்டனர்: வினேஷ் போகத்

சென்னை, 19 ஆகஸ்ட் 2024: வருங்காலத்தில் எனது கிராமத்தில் இருந்து என்னை விட சிறந்த மல்யுத்த வீராங்கனை உருவெடுத்தால் மகிழ்ச்சி அடைவேன் என்று வினேஷ் போகத் கூறியுள்ளார்.

பாரீஸ் ஒலிம்பிக் மல்யுத்தத்தில் பெண்களுக்கான 50 கிலோ எடைபிரிவில் இந்திய வீராங்கனை வினேஷ் போகத் இறுதிப்போட்டிக்கு முன்னேறியும், நிர்ணயிக்கப்பட்ட உடல் எடையை விட 100 கிராம் அதிகம் இருப்பது தெரியவந்ததால் அதிரடியாக தகுதி நீக்கம் செய்யப்பட்டார். இதை எதிர்த்து சர்வதேச விளையாட்டு நடுவர் மன்றத்தில் அப்பீல் செய்த அவர், தனக்கு வெள்ளிப்பதக்கம் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். நீண்ட இழுபறிக்கு பிறகு அந்த மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. இதனால் வினேஷ் போகத்தின் பதக்க கனவு முற்றிலும் கலைந்து போனது.

மிகுந்த ஏமாற்றத்துடன் நேற்று முன்தினம் தாயகம் திரும்பினார். டெல்லி விமான நிலையத்தில் அவருக்கு ஆட்டம் பாட்டதுடன் அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது. ரசிகர்கள் மத்தியில் பேசும் போது பதக்கத்தை இழந்த வேதனையில் கண்ணீர் விட்டார். அவரை சக வீரர்கள் தேற்றினர்.

பின்னர் அங்கிருந்து காரில் அவரது சொந்த ஊரான அரியானா மாநிலம் பலாலி கிராமத்திற்கு அழைத்து செல்லப்பட்டார். வழியெங்கும் அவருக்கு மக்கள் திரண்டு இருந்து உற்சாகமான வரவேற்பு அளித்தனர். இதனால் 135 கிலோ மீட்டர் தூரத்தை கடப்பதற்கு ஏறக்குறைய 13 மணி நேரம் ஆகி விட்டது. நள்ளிரவு 1 மணிக்கு சொந்த ஊரை சென்றடைந்தார். அவரது வருகைக்காக ஆவலுடன் காத்திருந்த அவரது குடும்பத்தினர் அவர் மீது மலர்களை தூவி ஆரத்தழுவி வரவேற்றனர்.

தொடர்ந்து அங்கு பாராட்டு விழா நடத்தப்பட்டது. அதில் அவருக்கு தங்கப்பதக்கம் அணிவிக்கப்பட்டது. பல்வேறு விதமான பரிசுகளும் வழங்கப்பட்டன. வாழ்த்து மழையில் நனைந்த 29 வயதான வினேஷ் போகத் பேசும் போது, ‘எங்களது போராட்டம் இன்னும் முடிவுக்கு வரவில்லை. அது தொடரும். உண்மை வெல்ல வேண்டும் என்று இறைவனை பிரார்த்திக்கிறேன். ஒலிம்பிக்கில் பதக்கத்தை தவறவிட்டது எனது வாழ்க்கையில் ஏற்பட்ட மிகப்பெரிய காயம். அதில் இருந்து மீள்வதற்கு எவ்வளவு காலமாகும் என்பது தெரியவில்லை.

எனது சக இந்திய வீரர்கள், கிராமத்தினர், குடும்பத்தினர் ஆகியோரது அன்பும், ஆதரவும் காயத்தில் இருந்து மீண்டு வருவதற்கான தைரியத்தை கொடுக்கும் என்று நம்புகிறேன். இதனால், நான் மீண்டும் மல்யுத்தத்திற்கு திரும்பலாம். உங்கள் மூலம் இன்று கிடைத்திருக்கும் துணிவை சரியான விஷயத்திற்கு பயன்படுத்த விரும்புகிறேன்.

இந்த கிராமத்தில் பிறந்ததில் நான் மிகவும் அதிர்ஷ்டசாலி என்று நினைக்கிறேன். நான் பெண்களின் மரியாதைக்காகவும், எனது கிராமத்தின் நலனுக்காகவும் எப்போதும் பாடுபடுவேன். இந்த கிராமத்தில் இருந்து ஒருவர் எனது பாரம்பரியத்தை எடுத்து சென்று எனது சாதனைகளை முறியடிக்க வேண்டும் என்று விரும்புகிறேன். எனது கிராமத்தில் இருந்து மல்யுத்த வீராங்கனைகளை உருவாக்க முடிந்தால், அது எனது வாழ்க்கையில் மிகப்பெரிய சாதனையாக இருக்கும். அப்படி நடக்காமல் போனாமல் மிகவும் வருத்தமடைவேன்’ என்றார்.

மேலும் அவர் ‘அவர்கள் எனக்கு (ஒலிம்பிக் கமிட்டி) தங்கப்பதக்கத்தை வழங்கவில்லை. ஆனால் மக்கள் எனக்கு அதை கொடுத்து விட்டனர். நான் பெற்ற அன்பும், மரியாதையும் ஆயிரம் ஒலிம்பிக் தங்கப்பதக்கங்களை காட்டிலும் மதிப்பு மிக்கது’ என்றார்.

வினேஷ் போகத்தும், சக வீரர்களும் பாலியல் சர்ச்சையில் சிக்கிய இந்திய மல்யுத்த சம்மேளன முன்னாள் தலைவர் பிரிஜ் பூஷன் சரண் சிங் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி டெல்லியில் மாதக் கணக்கில் பல்வேறு வழிகளில் போராட்டம் நடத்தினர்.

பிரிஜ் பூஷன் மீதான வழக்கு விசாரணை நிலுவையில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

# டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் முன்மொழியப்பட்ட புதிய முதலீட்டிற்காக மகாராஷ்டிராவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது



சென்னை, 19 ஆகஸ்ட் 2024: திருச்சி இந்தியாவிற்கான வலுவான உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில், டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் இன்று மகாராஷ்டிரா அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது, சத்ரபதி சம்பாஜி நகரில் பசுமைத் துறையில் உற்பத்தி வசதியை அமைப்பது குறித்து ஆய்வு செய்தது. கர்நாடகாவைத் தலைமையிடமாகக் கொண்டு, டிகேஎம் ஏற்கனவே உலகத் தரம் வாய்ந்த உற்பத்தி அமைப்பைப் பெற்றுள்ளது, பிடாடியில் அமைந்துள்ள இரண்டு அதிநவீன அலகுகளுடன், உலகளாவிய ஆட்டோமொபைல் நிலப்பரப்பில் இந்தியாவின் நிலையைப் பங்களிப்பதற்கும் வலுப்படுத்துவதற்கும் நன்கு பொருத்தப்பட்டுள்ளது.

மகாராஷ்டிரா அரசாங்கத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் இன்று விபி அரசாங்கத்தின் முதன்மைச் செயலர் (தொழில்துறை) டாக்டர் ஹர்ஷதீப் காம்ப்ளே (ஐ ஏ எஸ்) மற்றும் டி கே எம்-ன் இயக்குநர் மற்றும் தலைமைத் தொடர்பு அதிகாரி திரு. சுதீப் சாந்த்ராம் தல்வி ஆகியோர் திரு முன்னிலையில் திரு.ஏக்நாத் ஷிண்டே ஜி . மாண்புமிகு முதலமைச்சர் , மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. தேவேந்திர ஃபட்னாவிஸ் ஜி, மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. அஜித் பவார் ஜி மற்றும் பிற முக்கிய பிரமுகர்கள். டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டரின் எம்டி மற்றும் சிஇஓ மற்றும் டொயோட்டா மோட்டார் கார்ப்பரேஷன் (டிஎம்சி) பிராந்திய தலைமை நிர்வாக அதிகாரி திரு. மசகாசு யோஷிமுரா, டிகேஎம் துணைத் தலைவர் திருமதி மானசி டாடா, டிகேஎம் துணைத் தலைவர் திரு. ஸ்வப்னேஷ் ஆர். மாரு, துணை நிர்வாக இயக்குநர் டிகேஎம் பங்கேற்றனர்.

1999 இல் அதன் செயல்பாடுகள் தொடங்கியதில் இருந்து, இந்தியா முக்கியத்துவம் பெற்று வளர்ந்து வருகிறது, இப்போது உலகளவில் டொயோட்டாவின் முக்கிய சந்தையாக மாறியுள்ளது. "இந்தியாவை வளர்க - இந்தியாவுடன் வளருங்கள்" என்ற முக்கிய மதிப்புகளின் கீழ் இயங்கும் நிறுவனம், திறன் மேம்பாடு, உள்ளூர்மயமாக்கல் மற்றும் உள்ளூர் சுற்றுச்சூழல் அமைப்பின் மேம்பாடு ஆகியவற்றின் முக்கிய தேசிய முன்னுரிமைகளுடன் சீரமைக்க தனது செயல்பாடுகளை விரிவுபடுத்துவதற்கு விரிவாக செயல்பட்டு வருகிறது.

# முந்தைய ஆண்டின் இதே காலஅளவுடன் ஒப்பிடுகையில் 24% வருவாய் வளர்ச்சியுடன் கியூ1எஃப்ஒய்25 - ல் சிறப்பான நிதிசார் முடிவுகளை அறிவிக்கும் சர்வேஷ்வர் ஃபுட்ஸ் லிமிடெட்

சென்னை, 19 ஆகஸ்ட் 2024: சர்வேஷ்வர் ஃபுட்ஸ் லிமிடெட், பிராண்டட் மற்றும் பிராண்டட் அல்லாத பாஸ்மதி மற்றும் பாஸ்மதி அல்லாத அரிசி மற்றும் பிற பொருட்களை உற்பத்தி, வர்த்தகம், பதப்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள ஒரு பெருநிறுவனமாகும். உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் இயங்கி வரும் இந்நிறுவனம் 2024 ஜுன் 30-ல் முடிவடைந்த காலாண்டுக்கான நிதிசார் முடிவுகளை தெரிவித்திருக்கிறது. கியூ1எஃப்ஒய்25 - ல் முந்தைய ஆண்டின் இதே காலஅளவுடன் ஒப்பிடுகையில், 24% வளர்ச்சியுடன் இயக்க செயல்பாடுகளிலிருந்து ரூ. 23305.44 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டிருப்பதை இந்நிறுவனம் அறிவித்திருக்கிறது. எபிட்டா முந்தைய ஆண்டை விட 11% அதிகரித்து, ரூ. 1406.45 இலட்சமாக பதிவாகியிருக்கிறது. அதுபோலவே, வரிக்குப் பிந்தைய இலாபம் (பிஏடி) கியூ1எஃப்ஒய்24 - ல் இருந்த ரூ. 290.06 இலட்சத்திலிருந்து, ரூ.308.87 இலட்சமாக கியூ1எஃப்ஒய்25 - ல் பதிவாகியிருக்கிறது. ஒரு பங்கிற்கான இலாபஈட்டம் (ஈபிஎஸ்) &. 0.13 என இருக்கிறது. உறுப்பினர்கள் மற்றும் அனைத்து ஒழுங்குமுறை அமைப்புகளின் ஒப்புதலுக்கு உட்பட்டு, உரிமை பங்குகள் வெளியீடு உட்பட, கியூஐபி-கள், ஏடிஆர், ஜிடிஆர், எஃப்சிசிபி அல்லது வேறுபிற வழிமுறை அல்லது அவைகளின் ஒருங்கிணைந்த கலவை வழியாக ஈக்விட்டி பங்குகள் வெளியீடு மற்றும் ஒதுக்கீடு மூலம் ரூ.250 கோடி நிதி திரட்டும் திட்டத்திற்கு இந்நிறுவனத்தின் இயக்குனர்கள் குழு ஒப்புதல் அளித்திருக்கிறது. புரொமோட்டர் மற்றும் புரொமோட்டர் அல்லாத நபர்கள்/பொது குழு நிறுவனங்கள் என பலதரப்பினருக்கும் முன்னுரிமை அடிப்படையில் மாற்றத்தக்க வாரண்டுகள் ஒதுக்கீடு செய்யும் திட்டத்திற்கு நிறுவனத்தின் இயக்குநர்கள் குழு ஒப்புதல் அளித்திருப்பதை இந்நிறுவனம் அறிவித்திருக்கிறது. எஃப்பிஐ நோவா குளோபல் ஆப்பர்சூனிட்டிஸ் ஃபண்டு, பிசிசி-டச்ஸ்டோன் ஆகியவை ஒதுக்கீடு பெறும் நிறுவனங்களுள் சிலவாகும்.

சமீபத்தில், நிலைப்புத்தன்மையுள்ள விவசாய நடைமுறைகளை புரட்சிகரமாக மாற்றுவதற்காக பூமித்ரா ஓ2சி டெக் இந்தியா என்ற நிறுவனத்துடன் ஒரு கூட்டாண்மை ஒப்பந்தத்தை இந்நிறுவனம் மேற்கொண்டது. சர்வேஷ்வர் ஃபுட்ஸ் லிமிடெட் - க்காக கார்பன் கிரெடிட்களை விற்பனை செய்வதன் மூலம் உற்பத்தித்திறனை அதிகரிப்பது, மண்ணின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவது மற்றும் வருமானம் ஈட்டுவது ஆகியவையும் இந்த முக்கியமான ஒப்பந்தத்தின் நோக்கமாகும். மேலும், சர்வேஷ்வர் ஃபுட்ஸ் லிமிடெட் உடன் தொடர்புடைய, 45,000 ஏக்கர் பரப்பளவில் விவசாயத்தை மேற்கொள்ளும் 17,000+ விவசாயிகளுக்கு பயனளிப்பதாக இந்த கூட்டாண்மை ஒப்பந்தம் இருக்கும்.

# முன்னாள் ராணுவ தளபதி ஜெனரல் பத்மநாபன் மறைவுக்கு இந்திய ராணுவம் இரங்கல்

சென்னை, 19 ஆகஸ்ட் 2024: 20-வது ராணுவ தளபதியாக பணியாற்றிய ஜெனரல் சுந்தரராஜன் பத்மநாபன் (ஓய்வு) மறைவுக்கு இந்திய ராணுவம் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளது. ராணுவத் தளபதி ஜெனரல் உபேந்திர திவேதி மற்றும் இந்திய ராணுவத்தின் அனைத்து பிரிவுகளும் அவரது குடும்பத்திற்கு தங்களது இரங்கலை தெரிவித்துள்ளன.

ஜெனரல் பத்மநாபன் நேற்று இரவு சென்னையில் தனது 83 வயதில் காலமானார், முன்மாதிரியான தலைமை பண்புடன், அர்ப்பணிப்புடன் நாட்டிற்காகப் பணியாற்றினார்.

கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் 1940-ம் ஆண்டு டிசம்பர் 5-ம் தேதி பிறந்த ஜெனரல் பத்மநாபன் டேராடூனில் உள்ள தேசிய இந்திய இராணுவக் கல்லூரி (ஆர்.ஐ.எம்.சி) மற்றும் கடக்வாஸ்லாவில் உள்ள தேசிய ராணுவ அகாடமி (என்.டி.ஏ) ஆகியவற்றின் புகழ்பெற்ற முன்னாள் மாணவர் ஆவார். அவர் 1959 டிசம்பர் 13 அன்று பீரங்கிப் படைப்பிரிவில் நியமிக்கப்பட்டார்.

அவர் கசாலா படைப்பிரிவு, இரண்டு காலாட்படை பிரிகேடுகள் மற்றும் ஒரு பீரங்கி பிரிகேட் ஆகியவற்றிற்கு கமாண்டிங் அதிகாரியாக இருந்தார். லெப்டினன்ட் ஜெனரலாக, காஷ்மீர் பள்ளத்தாக்கில் ஒரு ராணுவ குழுவை வழிநடத்தினார், அங்கு அவர் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் முக்கிய பங்கு வகித்தார்.

1996 செப்டம்பர் 1 அன்று, ஜெனரல் பத்மநாபன் வடக்கு கமாண்டிங் பொது அதிகாரியாகவும், பின்னர் தெற்கு கமாண்டிங் தலைமை அதிகாரியாகவும் பொறுப்பேற்றார். அவர் 2000, அக்டோபர் 1 அன்று ராணுவத் தளபதியாக பதவியேற்றார்.

'ஆபரேஷன் பரக்ரம்' என்ற முக்கியமான காலகட்டத்தில் ஜெனரல் பத்மநாபன் இந்திய ராணுவத்தை வழிநடத்தினார். 43 ஆண்டுகால முன்மாதிரியான சேவைக்குப் பிறகு 2002 டிசம்பர் 31 அன்று அவர் ஓய்வு பெற்றார். அவரது மறைவு நாட்டிற்கும், இந்திய ராணுவத்திற்கும் பேரிழப்பாகும்.

ஜெனரல் பத்மநாபனின் ஈடு இணையற்ற அர்ப்பணிப்பு மற்றும் தேசிய பாதுகாப்புக்கான பங்களிப்புகளுக்காக நாடு அவரை நினைவில் கொள்ளும். அவரது ஆத்மா சாந்தியடையட்டும்.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் இன்று (19.08.2024) நடைபெற்ற திங்கள் கிழமை மக்கள் குறை களையும் நாள் கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.அஜய் சீனிவாசன் அவர்கள், பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டார்.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் இன்று (19.08.2024) நடைபெற்ற திங்கள் கிழமை மக்கள் குறை களையும் நாள் கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.அஜய் சீனிவாசன் அவர்கள், பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டார்.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் இன்று (19.08.2024) நடைபெற்ற திங்கள் கிழமை மக்கள் குறை களையும் நாள் கூட்டத்தில், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் விலையில்லா மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்களை மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.அஜய் சீனிவாசன் அவர்கள் பயனாளிகளுக்கு வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.சேதுராமலிங்கம் அவர்கள், சமூக பாதுகாப்பு திட்ட துணை ஆட்சியர் திரு.ஹபீபூர் ரஹ்மான் அவர்கள், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.விக்னேஷ்வரன் அவர்கள் ஆகியோர் உள்ளனர்.